ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு II இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 16 ஆம் திகதிய 8878 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் (அ) ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை மீளமைத்து வலுப்படுத்தும் மூலோபாயங்களை அமுல்ப்படுத்துதல் (ஆ) அமுல்ப்படுத்தல் ஆதரவு மற்றும் புத்தாக்க மானியங்கள் மற்றும் (இ) நிச்சயமற்ற அவசரகால நிலைமை பதிலளிப்பு ஆகிய பெயர்களிலான 03 பகுதிகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 697,936.86 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 4,419 மில்லியனானதுடன் அதில் ரூபா 31,588 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. அதில் ரூபா 2,368.27 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 15.00 மில்லியன் செயற்திட்டக் கூறு - II இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இக் கூறிற்கான ஒதுக்கீடு முன்னைய ஆண்டின் போது ஐ.அ.டொலர் 6.00 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 பெப்ரவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | நி.பி. இல. 371(ஆ) | ஒதுக்கப்பட்ட பணிகள் பூர்த்தியடைந்ததுடன் இடைக்கால முற்பணங்கள் உடனடியாகத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில், 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 66,200 முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதில் 39 நாட்கள் முதல் 44 நாட்கள் வரை தாமதம் ஏற்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல்களின் 2.12 (அ) பிரிவு | பெறுகை குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் அனைத்து உறுப்பினர்களும், வணிக இரகசியத்தன்மை, அவர்களின் பாரபட்சமற்ற தன்மை மற்றும் நேர்மை மற்றும் அவர்கள் வழங்குநர்களுடன் தனிப்பட்ட உறவுகளை கொண்டிருக்காதமை தொடர்பாக குறித்த குழுக்களின் முதல் கூட்டத்தில் உறுதியளிக்க வேண்டும். எனினும், ரூபா | ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீடுகள் பக்கச்சார்பற்றவை என்பதை உறுதிப்படுத்த இந்தச் சட்டம் கட்டாயமாக இருந்த போதிலும் துரதிர்ஷ்டவசமாக இது தவறியதன் காரணமாக விடுபட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 18.6 மில்லியன் பெறுமதியான 04 வகையான மருந்துகளை கொள்வனவு செய்ததில் இந்த வாக்குறுதியை நிருபிப்பதற்கு எந்த சான்றும் காணப்படவில்லை. | | |
| (இ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 2023 ஆகஸ்ட் 15 இல் மாத்திரமே கூட்டம் நடாத்தப்பட்டது. | இந்த குறிப்பிட்ட செயற்திட்டம் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சுக்கள் மற்றும் 9 மாகாண அமைச்சுக்களில் ஈடுபட்டுள்ளதால், பேச்சுவார்த்தையின் போது வழிநடாத்தலின் தன்மை குறித்து கலந்துரையாடப்பட்டது. அதன் பின்னர் தேசிய வழிநடாத்தல் குழுக் கூட்டம் குறைந்தபட்சம் ஆண்டுக்கு இரண்டு முறை நடாத்தப்பட வேண்டும் என செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் வெளியிடப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| | மாதமொன்றிற்கு அதிகபட்சமாக 2000 கிமீ வரை வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்ட வாகனத்திற்காக ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 120 ஐ செயற்திட்டம் செலுத்த வேண்டியிருந்ததுடன் மேலதிக கிலோமீற்றர் ஒவ்வொன்றுக்கும் கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 115 ஐ செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் வாகனத்தின் ஓட்ட அட்டவணையை கருத்தில் கொள்ளாமல் மேலதிக 10,102 கிலோமீற்றருக்காக ரூபா 1,161,370 செலுத்தப்பட்டது. | செயற்திட்ட அலுவலகம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் போக்குவரத்து வசதி வாங்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் விரிவாக்கத்துடன் கண்காணிக்கப்பட வேண்டிய மருத்துவமனைகளின் எண்ணிக்கை அதிகரித்ததால், உத்தியோகத்தர்களின் போக்குவரத்து தேவைகள் அதிகரித்தன. வரைவு கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு, பதிவுக் குறிப்புகளில் மைலோமீற்றர் | கொடுப்பனவுகளின் சரியான தன்மை சரிபார்க்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | புள்ளிவிபரங்களை பதிவு செய்யாதது உண்மையில் எமது தரப்பில் உள்ள ஒரு பிழையாகும். எனினும், தினசரி போக்குவரத்து நடவடிக்கையை முடித்த பின்னர், பதிவில் அதற்கு எழுதப்பட்ட தூரம் கிலோமீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதியாக, வாகனத்தை விட்டு வெளியேறிய கடைசி உத்தியோகத்தர் பதிவுக் குறிப்பைச் சரிபார்க்கிறார், | |

**3.2 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| பெறுகைத் திட்டத்தின் பிரகாரம், 02 மாதங்கள் முதல் 04 மாதங்கள் வரையிலான காலதாமதத்திற்குப் பின்னர் ஐ.அ.டொலர் 182,100 பெறுமதியான 06 வகையான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் உலக வங்கி அதிகாரிகள் முதன்மை மருத்துவ பராமரிப்பு சேவை நிறுவனங்களுக்குச் சென்று, அதன் AID MEMORI (மிஷன் அறிக்கை) மூலம் அத்தியாவசிய மற்றும் தேவையான மருந்துகளை முதன்மை பராமரிப்பு மட்டத்தில் கிடைப்பதை உறுதிசெய்வதற்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் பெறுகை தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு PMU மருத்துவ விநியோகப் பிரிவுடன் ஒருங்கிணைத்தது. எனினும், எதிர்பாராத சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட MSD இந்த பெறுகைகளை சரியான காலத்தில் செய்வதில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நிகழ்நேர தகவல் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவது அடிக்கடி தாமதமாகிறது. | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவசர கொள்வனவுகள் குறைக்கப்பட வேண்டும். |